

ஈரோடு மாவட்டம் அந்தியூர் பகுதியில் உள்ள பொதுமக்களின் நிபந்தனை பட்டாக்களை மாற்றி நிபந்தனையற்ற பட்டாக்களாக வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டு இருந்தார் .அதனை தொடர்ந்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பொது மக்களுக்கு பட்டாக்களை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சேர்மன், பேரூராட்சி உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடியில் திட்டப்பணிகளைத் திறந்து வைத்து

# 3,958 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 10–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் 177.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 4 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை புனரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, 3,958 பயனாளிகளுக்கு 110.66 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.3.2026 அன்று தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 177.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 4 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகத்தை புனரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, 3,958 பயனாளிகளுக்கு 110.66 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில் துணை முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் 136.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உயர்சிறப்பு மருத்துவமனை கட்டடம், திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் 38.53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள மகப்பேறு, குழந்தைகள் நலப்பிரிவு மற்றும் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், எட்டயபுரம் மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறை கட்டடம், படர்ந்தபுளி அரசு உயர்நிலைப்பள்ளியில் 1.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 6 வகுப்பறை கட்டடம் என 177.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 4 திட்டப்பணிகளை திறந்து வைத்தார்.

தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் தூத்துக்குடி மாவட்ட விளையாட்டு வளாகத்தை 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 1,755 பயனாளிகளுக்கு 40.09 கோடி ரூபாய் மதிப்பிலான வீட்டுமனைப்பட்டா/ வரன்முறைப் பட்டா (கணினி இ பட்டா) க்களையும்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 1800 பயனாளிகளுக்கு 63.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் 20 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 3.06 கோடி ரூபாய்க்கான வங்கிக் கடன் இணைப்புகளையும்,

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS), கலைஞர் கைவினைத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 5 பயனாளிகளுக்கு 54.09 லட்சம் ரூபாய் மானிய நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் என 51 மாற்றுத் திறனாளிகளுக்கு 53.58 லட்சம் ரூபாய் மதிப்பிலான உதவி உபகரணங்களையும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் 9 பயனாளிகளுக்கு கடல்சார் கல்வி உதவித் தொகை, குளிர்காப்பிடப்பட்ட நான்கு சக்கர வாகனத்திற்காக மானியத்தொகை என 53.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும்,

தாட்கோ திட்டத்தின் சார்பில் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தின் கீழ் 5 தொழில் முனைவோருக்கு 51.00 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் தூத்துக்குடி மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் சார்பில் 77 பயனாளிகளுக்கு 15.40 லட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், 39 பயனாளிகளுக்கு 27.49 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச வீட்டு மனைப்பட்டாக்களையும் வழங்கினார்.

மேலும் கூட்டுறவுத் துறையின் சார்பில் 39 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 39.00 லட்சம் ரூபாய்க்கான வங்கிகடன் இணைப்புகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு 3.52 லட்சம் ரூபாய் மதிப்பிலான வேளாண் இடுபொருட்களையும்,

சமூக நலத்துறையின் சார்பில் 10 பெண்களுக்கு முதலமைச்சரின் இரண்டு பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2.50 லட்சம் ரூபாய்க்கான நல உதவிகளையும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புத்துறையின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் 106 பயனாளிகளுக்கு 2.12 லட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும்,

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு 26,760 ரூபாய் மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் முதலமைச்சர் விளையாட்டு வீரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 15 விளையாட்டு வீரர்களுக்கு காப்பீட்டு அட்டைகளையும், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கான ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் வீராங்கனை முத்துமீனாவிற்கு 12.00 லட்சம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலையையும்,

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் அனைவருக்கும் வீடு வசதி திட்டத்தின் கீழ் 16 பயனாளிகளுக்கு தலா 8,50,000 ரூபாய் வீதம் மொத்தம் 1.36 கோடி ரூபாய்க்கான மானியத்தையும் என கூடுதல் மொத்தமாக 3,958 பயனாளிகளுக்கு 110.66 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், மாநகராட்சி ஆணையர் திருமதி சி.ப்ரியங்கா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி ஆர்.ஐஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், உதவி ஆட்சியர் (பயிற்சி) தி.புவனேஷ் ராம், உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### வாழப்பாடியில்

# சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மு.ரா.கருணாநிதி தலைமை! மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. சிறப்புரை!

சேலம், மார்ச் 10–

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மு.ரா. கருணாநிதி தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்துகொண்டு சிறப்புரையாற்றி னார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ்குமார், சின்னதுரை, மலையரசன் எம்.பி., டாக்டர் தருண், ஏ.ஏ. ஆறுமுகம், தொகுதி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’

மார்ச் 9ல் திருச்சியில் 10 லட்சம் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளும் மாபெரும் நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டை இந்தியாவே வியந்து பார்க்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்து மிகப் பிரம்மாண்டமாக நடத்திட தயாராகிக் கொண்டிருக்கிறோம்.

திருச்சியின் மாநாடு திருப்புமுனை மாநாடு என்பதை விட திக்கெட்டும் கழகத்தின் வெற்றியை உறுதி செய்திடும் மாநாடாக நடத்திட வேண்டும். திருச்சியில் திரளும் கூட்டம் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்குக் கட்டியம் கூறுவதாய் அமைந்திட வேண்டும். தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் ஓரணியில் தமிழ்நாடு, என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைகள், கழக இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு, வாக்குச்சாவடி நிலை முகவர்கள் உறுப்பினர்கள் பயிற்சிக் கூட்டம், வெல்லும் தமிழ்ப்பெண்கள், வீடு வீடாகப் பரப்புரை என அசுர வேகத்தில் நம் கழகம் களப்பணியாற்றி வந்தாலும் இந்த மாபெரும் மாநில மாநாட்டில் அனைத்து தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், செயற்குழுபொதுக்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட நகர ஒன்றிய பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வாக்குசாவடி முகவர்கள் என கழகத்தின் அனைத்து நிர்வாகி களும் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் அழைக்கிறேன். சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்களும் தங்கள் அணி சார்பில் நகர, ஒன்றிய, பேரூர் கழகம் அனைவரும் முழுமையாக கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர் தருண், மலையரசன் எம்.பி., மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், செயற்குழு உறுப்பினர்கள் மனோகரன், சங்கர், முத்துலிங்கம், சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், சதீஷ்குமார், உமாசங்கர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், வரதராஜன், சித்தார்த்தன், மணி, அழகு வேல், பாலமுருகன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன், ராமச்சந்திரன், மற்றும் பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி.,கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், சின்னதுரை, மலையரசன் எம்.பி., டாக்டர் தருண், ஏ.ஏ.ஆறுமுகம், தொகுதி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# உலக மகளிர் நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 10–**

**‘உலக மகளிர் நாளை’யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘உலக மகளிர் நாளை’ முன்னிட்டு சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துப் பதிவு வருமாறு:-

வெல்லும் தமிழ்ப் பெண்களே…

நீங்கள் வெல்வதற்கு உலகும் உங்களுக்குத் துணை நிற்க திராவிட மாடலும் இருக்கிறது!

தடைகளைத் தகர்த்தெறிந்து தொடர்ந்து முன்னேறுங்கள். உங்களது பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் உடன்நிற்க நமது திராவிட மாடல் அரசு இருக்கிறது… அனைவருக்கும் உங்கள் ஸ்டாலினின் உலக மகளிர் நாள் நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# வா தலைவா வா…!



தடைகளை
விடைகளாக்கும்
தலைவா..

முட்டுக்
கட்டைகளை
வெற்றிக்
கோப்பைகளாக்கும்
முதல்வா..

போர்க்களங்களை
புகழ்க்
கிரீடங்களாக்கும்
புதல்வா..

திறமையை
துடுப்பாக்கி

திசை
எட்டையும்
கிழக்காக்கும்

திராவிட
மாடலின்
இறைவா…

‘பூமி
தன்னைத் தானே
சுற்றிக் கொண்டு

சூரியனை
சுற்றி வருகிறது’

என்னும்

அறிவியல்
தத்துவத்தை

அறிவாலய
தட்பமாக்கிய
ஞானக்காரரே..

சக்கர
வியூகங்களில்
சிக்க

நான்
அபிமன்யூ
அல்ல

அந்த
சக்கரத்தையே
சுட்டு விரலில்

சுழலவிடும்

அறிவாலயத்து
கிருஷ்ண பரமாத்மா
என்பதை

இந்நாட்டு
அரசியலுக்கு

தெளியவைத்த
தென்னாட்டு
நாயகரே…

எதிரிகள்
ஏவும்
கணைகளை
எல்லாம்

கையில்
பிடித்து
காது குடையும்

நற்றமிழ்
கலைஞரின்
நகல் வடிவே…

அச்சமெனும்
சொல் அறியா

ஆரூரின்
தேரழகே..

மிரட்டல்
உருட்டலுக்கு

விழி சிமிட்டா
மிசா வீரமே..

ஓயாத
உழைப்பே

ஒப்பில்லா
வியப்பே..

“முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்
எனும் நான்”…

இந்த மந்திர
மொழியை
மறுமுறை கேட்க

உலகமே
ஆர்வத்தில்..

அதற்கான
ஒரு விரல்
புரட்சிக்கு

ஊரெல்லாம்
ஆயத்தத்தில்..


ஆம்..

உதயசூரியனின்

ஒளியும்
ஒலியில் மகிழ

ஓட்டுப்பதிவு
எந்திரங்களும்
ஆர்வத்தில்…

**என்ன நாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

